புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===================================================================

# திரையிசையில் பாரதியாரின் பாடல்கள்

திரு. தா. சரவணன்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை – 05.

===================================================================

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்கூறும் நல்லுலகில் பாரதியாரின் பங்களிப்பானது மிக முக்கியமானதாக உள்ளது. நம்நாடு விடுதலை அடைவதற்குப் பெரிதும் தம் பாட்டினால் முழக்கமிட்டவர். மக்களுக்குத் தன் பாடல்வழி விடுதலை உணர்ச்சி ஊட்டிய மகாகவி. இப்பெருங்கவிஞரின் பாடலானது வெறும் ஏட்டில் மட்டுமே இருந்துவிடாமல் இசையில் கலந்து எழுத்தறிவு இல்லாத மக்களிடத்தும் சென்றடையும் வகையில் பல திரைப்பட இயக்குனர்களாலும் பாடலாசிரியர்களாலும் பல்வேறு திரைப்படங்களில் இடம்பெற்றுள்ளது. இதனை ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

ஆரம்பகாலத்தில் நாடகக்கலையாகத் தோற்றம் பெற்றவைதான் பின்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து திரைப்படமாக உருவெடுத்தன. பின்னர் அவை வெகுசன மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடைய கலைப்படைப்பாக உயர்ந்தன. அது இலக்கியம், இசை, நாடகம் ஆகியவற்றினை மூல ஆதாரமாகக் கொண்டு புகைப்படக்கருவி, ஒளி, ஒலிப்பதிவுகள் போன்ற தொழில்நுட்பக் கூறுகளையும் உள்ளடக்கி வலிமை வாய்ந்த சாதனமாகத் திரைப்படம் திகழ்கிறது. திரைப்படத்தின் சூழலுக்கேற்பவும் கதை ஓட்டத்திற்கேற்பவும் பாடல்கள் இடம்பெறுகின்றன. ஒரு திரைப்படம் வெற்றிபெற அடிப்படைக் காரணங்களில் பாடலும் ஒன்று அந்த வகையில் பாரதியார் பாடல்கள் என்பது வாயுள்ள மக்களெல்லாம் பாட வேண்டும். காதுள்ள மக்களெல்லாம் கேட்க வேண்டும். கருத்துள்ள மக்களெல்லாம் சிந்திக்க வேண்டும் என்ற நோக்கில் இருக்கின்ற மகாகவி பாரதியாரின் பாடல்களை எடுத்து திரைப்படங்களில் பயன்படுத்திய பாங்கினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## கலை

கலை, இலக்கியம், மொழி பற்றிய சிந்தனைகள் இல்லாத ஒருவர் உண்மையான படைப்பாளராகத் திகழ முடியாது. ஏனென்றால் ஒரு தேசத்து மக்கள் உண்மையான உற்சாகத்தையும் வீரத்தன்மையையும் புகழையும் கொண்டிருக்கும் போதுதான் அங்கே பெரிய கலை எழுச்சி ஏற்படுகின்றது. எனவே ஒரு படைப்பாளன் இவற்றை அறிதல் வேண்டும். பல்வேறு கலைகள் நம் நாட்டில் காணப்பட்டாலும் பாரதியார் தான் கண்டு கேட்டு உற்று உணர்ந்து ஆராய்ந்த சில கலைகள் பற்றிய கருத்துரைகளையும் அவற்றின் மேம்பாட்டிற்கான யோசனைகளையும் இவ்வாறு வெளிப்படுத்துகிறார். நமது கலைகளின் மேன்மையை நமது மக்கள் முதலில் உணர வேண்டும், அப்போது தான் அவற்றைப் போற்றவும் வளர்க்கவும் மக்கள் முயல்வார்கள் எனப் பாரதியார் எண்ணிய போதிலும் அடிப்படையான கல்வி வாய்ப்பும் அமைதியான வாழ்க்கை வசதியும் இல்லாத மக்களிடத்தில் கலை மதிப்புணர்ச்சியைப்

புகுத்துவது என்பது இயலாத செயல். வெளியுலகம் நமது கலை மாண்பை உணரும் முன் நம்மவர் உணர்வதையும் உணர்த்துவதையும் முக்கியமென பாரதியார் உணர்ந்தார். ஆலயம் பல கட்டுவதைவிட ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தலையே கோடி புண்ணியம் என்று அறிந்தே அதனை,

"வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்"

(பாரதியார் கவிதைகள், ப.45.)

எனப் நம்பினார் பாரதியார். கலைகளும் இலக்கியங்களும் ஏழை எளிய மக்களுக்கு வாய்க்கப் பெற்றால் அவர்கள் வாழ்வில் வளம் பெருகும் என்று உணர்த்தினார்.

கலைகள் எல்லாம் கருத்துணர்வை வெளிப்படுத்தும் சாதனங்களே! அவற்றுள் கவிதைக்கலை என்பது மனித உணர்ச்சியினை மொழியால் நிரல் படக்கோர்த்து ஒலியின்பத்தோடு வெளியிடுவதால் கலையாகிறது என்பர். கலைகள் அனைத்திலும் அழகியல் மண்டிக்கிடந்தாலும் கவிதைக்கலை பழகுகிறவர்களை எளிதில் உணர்வு வழியிலும் அறிவு வழியிலும் சிந்திக்கச் செய்கின்றது. உள்ளத்தைச் சிறப்பிக்கும் படைப்பாற்றல் உள்ள ஒரே இனம் மனித இனம். மனிதன் இத்தகைய இருபெரும் கருவியாகிய மொழியைக்கொண்டு கவிதைக்கலையைக் காலந்தோறும் வளர்த்து வருகிறான். தான் படைத்த மொழிக்குத் தானே இலக்கணம் அமைத்து இலக்கியம் படைக்கின்றான். எனவே பாரதி காலமும் கருத்தும் வளரும் தன்மையுடையன என்பதை,

"சுவை புதிது பொருள் புதிது வளம்
புதிது சொற் புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மாகவிதை..."

(பாரதியார் கவிதைகள், ப.224.)

என்று கவிதை கலையானலும் பிறகலையானலும் புதிது புதிதாகத் தோன்றும் என்பதை உணர்த்துகிறார்.

இசை

தமிழக இசை வரலாறு என்பது மிக நீண்ட பின்னணி உடையது. சங்ககாலம், காப்பியகாலம், பக்தி காலம், சிற்றிலக்கிய காலம் என்று தொடர்ச்சியான இசைப் பாடல்கள் மரபையும் பண்பாட்டையும் கொண்டதாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு சூழலிலே வாழ்ந்த பாரதி தன்னைச் சுற்றி உலவிய இசை வடிவங்களையெல்லாம் ஒருங்கே உட்கொண்டார்.

உலகமெங்கும் உள்ள மக்கள் அனைவரும் மயங்கும் அல்லது கட்டுப்படுகின்ற ஈர்ப்பு சக்தி ஒன்று உண்டெனில் அது இசை என்கின்ற ஒன்றேயாகும். இதை யாரும் மறுக்க முடியாது. இசைக் கலையின் பெருமையை வார்த்தைகளால் வருணித்துக்காட்ட இயலாது. வரையறுத்துக் கூறுதலும் இயலாது. மனிதர்களின் உள்ளங்களை மட்டுமில்லை சகல ஜீவராசிகளையும் தன் வயப்படுத்தும் தன்மை இசைக்கலைக்கு உண்டு. இத்தகைய இசையானது மனித வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மனிதனோடு பிரிக்க முடியாதபடிக்கு உறவு கொண்டிருக்கின்றது. இசை இன்பமளிப்பது, சோர்வு அகற்றுவது, வீரம் ஊட்டுவது, உணர்ச்சி ஏற்றுவது மற்றும் கவலையை போக்க வல்லது. இதனைத்தான் பாரதி,

"பண்ணிற் கோடிவகை யின்பம்- நான்
பாடத்திறனடைதல் வேண்டும்"

(பாரதியார் கவிதைகள், ப.109.)

என்னும் வரிகளில் இன்பத்தினையும், பின்னர்.

"பண்ணையிசைப்பீர்- நெஞ்சிற்
புண்ணையொழிப்பீர்- இந்தப்
பாரினிலே துயர் நீங்கிடும்"

(பாரதியார் கவிதைகள், ப.141.)

இதில் பாட்டைத் திறப்பது பண் அந்தப் பண்ணை இசைத்து நெஞ்சத்துப் புண்ணை ஒழிக்க வழிகாட்டுகிறார். பாரதி இசையில் பாரதிக்கு இருந்த புலமையும் இசை பாடல்களை அவர் இயற்றிய பாங்கும் இசை உலகில் என்றும் நிலைத்த இடத்தை பெற்றிருக்கும்.

தாளம்

தாளம் என்பது பாட்டினது அடியின் கால அளவை அளந்து நிறுத்தும் பாட்டில் உள்ள எழுத்துக்கள் அசைகள் ஆகியனவற்றில் நீட்டல் குறுக்கல்களைச் சிதையாமல் பாதுகாக்கும். தாளம் என்ற சொல்லிற்கே தட்டி வருதல் என்பது பொருள் ராகத்திற்கு ஸ்வரங்கள் எவ்வாறு உயிர்நாடியோ அதைப் போன்றே தாளமும் பாட்டுக்கு மிகவும் அவசியம் என்பதைப் பாரதியார் ஓர் இடத்தில் மிக அழகாகத் "தாளம் தவறிப் பாடினால் காதுக்கு வெறுப்பாக இருக்கும்" மக்களுக்குப் பிரியமுண்டாகாது என்பதை,

"தாளம் தாளம் தாளம்
தாளத்திற்கோர் தடையுண்டாயின்
கூளம் கூளம் கூளம்"

(பாதிரியார் கவிதைகள், ப.392.)

என்கிறார். அதாவது, தாளத்தை அவர் இன்பம் என்றே குறிப்பிடுகிறார். பாட்டுக்கு இசைந்தபடி அமைவதுதான் தாளம் என்பது பாரதியின் கருத்தாகும்.

பாரதி தனது கம்பீரமான குரலால் பாடல்களை அதற்கேற்ற இராகத்தில் சிறிதும் தாளம் தவறாமல் பாடுவதில் மிக வல்லவர் என்பதை,

"என்றன் பாட்டுத்திறத்தாலே- இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்"

(பாரதியார் கவிதைகள், ப.109.)

என்கிற வரிகளின் மூலம் இந்த உலகத்தைப் பாலிக்கும் அளவுக்குப் பாட்டுத்திறம் வேண்டும் என்று பாரதி தன் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்.

தாளங்களிலும் ஏழு தாளங்கள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. ஏழு தாளங்களை வடமொழியில் ஸப்த ஸ்வரங்கள் என்று சொல்வார். அவை துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை ,அடம், ஏகம், தாளங்களிலும் இன வகைகள் உண்டு. அவற்றின் ஐந்து இனங்கள் சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், ஸங்கீர்ணம்,ஏழு தாளங்களும் ஐந்து இன வகைகளும் சேர்ந்து முப்பத்தைந்து தளங்களாக அமைகின்றன.

திரைப்பட தோற்றம்

அமெரிக்க விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் கைனட்டோஸ்கோப் என்ற கருவியைக் கண்டுபிடித்தார். இதுவே திரைப்படத்தின் தொடக்க நிலைக்கு வழிவகுத்தது.பின்னர் ஒளிபெருக்காடி மூலம் ஒவ்வொருவராக படம் பார்த்த நிலை மாறி ஒரே சமயத்தில் பலர் உட்கார்ந்து படம் பார்க்கும் வகையில் சினிமோட்டோகிராபி என்ற கருவியை 1895 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள் கண்டுபிடித்தனர். திரைப்பட கருவிக்கு இதுவே முன்னோடியாகத் திகழ்ந்தது.

இந்தியாவில் முதன்முதலாகப் பம்பாயில் டூபாண்ட் என்ற பிரெஞ்சுக்காரரால் ஏசுவின் வாழ்க்கை என்ற திரைப்படம் லூமியர் கண்டுபிடித்த திரைப்படக் கருவி மூலம் காட்டப்பட்டது. இதுவே இந்தியாவில் வெளிவந்த முதல் சலனப் படமாகும். ஆரம்பகாலச் சலனப் படங்கள் பேசாப் படங்களாக அதாவது மௌனப்படங்களாக வெளிவந்தன. இத்தகைய மௌனப் படங்களே பேச்சுவழக்கில் ஊமைப்படங்கள் எனப்பட்டன .

இந்தியச் சூழலில் தாதாசாகேப் பால்கே முதல் மௌனப்படம் ' அரிச்சந்திரா' இது 1913 இல் வெளிவந்தது. தென்னிந்தியாவில் நடராஜ முதலியார் தயாரித்த முதல் மௌன படமான கீசக வதம் 1916 இல் வெளிவந்தது. மௌனப்படங்களுக்கு மக்களிடையே இருந்த ஆர்வம் குறையத் தொடங்கத் தலைப்பட்ட நேரத்தில் பேசும் படங்கள் வரத் தொடங்கியது. அர்தேஷீர் ஈராணி என்பவர் இந்தி மொழியில் 'ஆலம் ஆரா'என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டார். இதுவே இந்தியாவில் வெளியான முதல் பேசும் படம். தமிழ் மொழியில் முதல் பேசும் படம் 1931-ல் வெளிவந்த 'காளிதாஸ்' ஆகும். இப்படத்தை எச். எம்.ரெட்டி என்பவர் இயக்கியுள்ளார்.

*திரைப்படங்களில் பாடல் கையாளுதல்*

*சினிமா மிக வலிமை மிக்க சாதனமாகத் திகழ்கின்றது. திரைப்படமானது சாமானிய மனித வாழ்க்கையை விட்டுப் பிரிக்க முடியாத வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. இப்படி இருக்கையில் தொடக்ககாலத்தில் மௌனப் படங்களில் பாடல்கள் இடம் பெறவில்லை என்பது தெரிந்தவை. மௌனப் படங்கள் பேசத் தொடங்கியபோது அவை பேசுவதில் காட்டிய அக்கறையை விடப் பாடுவதில் தான் அதிக அக்கறை காட்டியது. இவ்வாறு தமிழ் திரைப்படத்தின் தொடக்கம் பாட்டுடனும் இசையுடனும் கலந்த ஒன்றாகும். இவற்றைப் பிரித்தலாகாது.*

*பொதுவாகப் திரைப்படங்களில் பாடல்கள் உணர்வு வெளிப்பாடு, உணர்வு நிலை நீட்சி, கதை விளக்கம், கதை விவரிப்பு, கதை சூழல், புலப்பாடு காட்சி விளக்கப் பின்புலம் ஆகிய வகைகளிலும் கால நிரப்பியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. கதைப் பின்புலத்தோடு ஒட்டியே திரைப்படப் பாடல்கள் இயற்றப்படுகின்றன. இவ்வாறன்றி ஏற்கனவே எழுதப்பட்ட பாடல்களும் கவிதைகளும் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப திரைப்பாடல்கள் கையாளப்படுகின்றன. அவற்றில் மகாகவி பாரதியாரின் பாடல்கள் தொடக்கக்காலம் முதல் இன்று வரை தமிழ்த் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன சமீபத்தில் கூட பாரதியார் "வெந்து தனிந்தது காடு" என்னும் பாடல் வரி திரைப்படத்தின் பெயராக வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

*திரைப்படங்களில் பாரதியார் பாடல்கள்*

*மக்களிடம் செல்வாக்குப் பெற்ற சினிமாத் துறையில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பாரதியின் பாடல்களைப் பயன்படுத்த முன்வந்தனர். அவற்றில் பாரதியார் பாடல்கள் சினிமாத்துறையில் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றவை. 1935 ஆம் ஆண்டு வெளிவந்த மேனகா படத்தில்,*

*"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே"(பாரதியார் கவிதைகள், ப.40.)*

*1940 ஆம் ஆண்டு வெளிவந்த இராஜயோகம் என்ற படத்தில்,*

*"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே*
*இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"*
*(பாரதியார் கவிதைகள், ப.171.)*

*1940 ஆம் ஆண்டு வெளிவந்த உத்தமபுத்திரன் படத்தில்,*

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்*
*தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே" (பாரதியார் கவிதைகள், ப. 42.)*

*1942 திரைக்கு வந்த பிருத்விராஜன் திரைப்படத்தில்,*

*"பாரத சமுதாயம் வாழ்கவே! வாழ்க வாழ்க!*
*பாரத சமுதாயம் வாழ்கவே! ஜய ஜய ஜய !*
*முப்பது கோடி ஜனங்களின் சங்கம்*
*முழுமைக்கும் பொது உடைமை" (பாரதியார் கவிதைகள், ப.39.)*

*ஆக தேசபக்திக் கனலைத் தமிழர் தம் நெஞ்சில் மூட்டிவிட்ட பாரதியார் பாடல்களை ஆரம்ப காலத்தில் திரைப்படங்களிலே திரைப்படத் தயாரிப்பாளர்கள் இடம் பெறச் செய்தனர் என்பது நமக்கு நன்கு புலனாகின்றது. மேற்குறித்த திரைப்படங்களில் ஒலித்த பாரதியின் பாடல்கள் பாமர மக்களைப் பெரிதும் ஈர்த்தன. நம்நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே பாரதியின் சுதந்திர தாகத்தைத் தமிழகமெங்கும் எதிரொலிக்கச் செய்யும் வகையிலான பாடல்கள் திரைப்படங்களிலே இடம்பெறலாயின. சொல்லப் போனால் பாரதியாரின் பாடல்களைக் கேட்டவர்கள் எல்லாம் சொக்கிப் போனார்கள். பாமர மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றது. படிப்பறியாத மக்களிடையே பாரதியார் பாடல்கள் பரவ சினிமா ஒரு சாதனமாக அமைந்தது.*

அவ்வகையில் பாரதியாரின் பாடல் 1935 ஆம் ஆண்டு வெளிவந்த மேனகா என்ற திரைப்படத்தில் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகும் தங்கள் தேவைக்கேற்ப சினிமாவில் பாடல்களைச் சேர்த்துக்கொண்டனர். சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாரதியார் பாடல்கள் இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

திரைப்படங்களும் அதில் இடம் பெற்ற பாரதியார் பாடல்களும்

- மேனகா (1935)-வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
- அதிர்ஷ்டம் (1939)-ஆடுவோமே பள்ளு பாடுவோமே
- உத்தமபுத்திரன் (1940)- செந்தமிழ் நாடெனும் போதினிலே
- நாம்இருவர் (1947) - ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
  - வாழிய செந்தமிழ்
  - சோலை மலரொளியோ உனது சுந்தரப் புன்னகை தான்
  - விடுதலை! விடுதலை! விடுதலை
  - வெற்றியெட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே
  - தாயின் மணிக்கொடி பாரீர்
- வேதாள உலகம் (1948)- தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன்
  - செந்தமிழ் நாடெனும் போதினிலே
  - தூண்டிற் -புழுவினைப்போல்
  - ஓடி விளையாடு பாப்பா
- சக்ரதாரி (1948) -காக்கைச் சிறினிலே
- வாழ்க்கை(1949)-பாரத சமுதாயம் வாழ்கவே
- ஏழை படும் பாடு(1950)-கண்ணன் மனநிலையை தங்கமே தங்கம்
- மணமகள்(1951) -காவியஞ்செய்வோம்- நல்ல காடு வளர்ப்போம்
- -சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
- ஓர் இரவு (1951) -கொட்டு முரசே கொட்டும் முரசே
- அம்மா (1952) -ஜயமுண்டு பயமில்லை மனமே
- அந்தமான் கைதி (1952)- காணி நிலம் வேண்டும்
- பராசக்தி (1952)-நெஞ்சு பொறுக்குதில்லையே
- தாய் உள்ளம் (1952) -வெள்ளைத் தாமரை
- நாம் (1953) - ஆயிரம் தெய்வம் உண்டென்று
- பெண்-(1953) -மாதர்தம்மை இழிவு செய்யும்
- தெருப்பாடகன்(1954)- உலகத்து நாயகியே
- கூண்டுக்கிளி(1954)- சொல்ல வல்லாயோ கிளியே
- விளையாட்டு பொம்மை (1954)-மோகத்தைக் கொன்றுவிடு
  -தீர்த்தக் கரையினிலே கண்ணம்மா
- கள்வனின் காதலி (1955) -தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
  -மனதில் உறுதி வேண்டும்
  -மங்கியதோர் நிலவினிலே
  -நல்லதோர் வீணை செய்தே
- நல்ல தங்கை(1955)-கூலி மிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்
- குலதெய்வம் (1956)-காதல் காதல் காதல்
- ரங்கோன் ராதா (1956)- ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
- ராஜ ராஜன்( 1957)- செந்தமிழ் நாடெனும் போதினிலே
- சக்கரவர்த்தி திருமகன் (1957) -தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி
- புதுவாழ்வு( 1957) -சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா
- புதையல்(1957)- நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது
- திருமணம்(1958)- மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
- பானை பிடித்தவன் பாக்கியசாலி (1958)-திக்குத் தெரியாத காட்டில்
- ஓடி விளையாடு பாப்பா (1959) -கும்மியடி! தமிழ் நாடு

-பச்சைக் குழைந்தையடி
-ஓடி விளையாடு பாப்பா

- அவர் யார் *(1959)* - கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன்
- பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்*(1959)*-ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
  -தேச சுதந்திரம் வழங்கிய தியாகிகள்
- நாலு வேலி நிலம் *(1959)*- முருகா! முருகா! முருகா!
  -செய்யும் தொழில் உன் தொழிலே கான்
  -காணி நிலம் வேண்டும் பராசக்தி
  -நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு
- ஆடவந்த தெய்வம்*(1960)*- கண்ணில் தெரியுதொரு தோற்றம்
- படிக்காத மேதை *(1960)*- எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி
- பாவை விளக்கு*(1960)* -மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
- கப்பலோட்டிய தமிழன் *(1961)*-பாருக்குள்ளே நல்ல நாடு
  -வந்தே மாதரம் என்போம்
  -என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
  -சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச்
  -வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்
  -காற்று வெளியிடைக் கண்ணம்மா
  - ஓடி விளையாடு பாப்பா-நீ
  -உணவு செல்லவில்லை- சகியே
  -தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா
  -நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
- தெய்வத்தின் தெய்வம் *(1962)*-கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
- கைதியின் காதலி *(1963)* - நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்
- கை கொடுத்த தெய்வம்*(1964)*- சிந்து நதியின் மிசை நிலவினிலே
- வழி பிறந்தது *(1964)* -பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
- கௌரி கல்யாணம் *(1966)*- வெள்ளைக் கமலத்திலே
- திருமால் பெருமை *(1968)*- நந்த லாலா நந்தலாலா காக்கை சிறகினிலே
- குரு தட்சணை *(1969)* -மாடு கன்று மேய்த்திடுவேன்
- வியட் நாம் வீடு *(1970)* - உன்கண்ணில் நீர்வழிந்தால் என்நெஞ்சில்
- குறத்தி மகள் *(1972)*- சாதிகள் இல்லையடி பாப்பா
  - தமிழ்த் திருநாடு
- தாயகம் *(1972)*-பாரத சமுதாயம் வாழ்கவே
- எங்கள் தாய் *(1973)*-தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
- கவரிமான் *(1979)*- சொல்ல வல்லாயோ கிளியே
- வறுமை நிறம் சிவப்பு *(1980)*- தீர்த்தக் கரையினிலே
  -நல்லதோர் வீணை செய்தேன்
- மலர்களே மலருங்கள் *(1980)*- சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா
- கனவுகள் கற்பனைகள் *(1982)* - பிள்ளைப் பிராயத்திலேயே
- தூக்கு மேடை *(1982)* -இனியொரு தொல்லையும் இல்லை
- ஏழாவது  மனிதன் *(1982)*- காக்கைச் சிறகினிலே
  -மனதில் உறுதி வேண்டும்
  -வீணையடி நீ எனக்கு
  -செந்தமிழ் நாடெனும்
  -அச்சமில்லை அச்சமில்லை
  - திக்குகள் எட்டும் சிதறி
  -நெஞ்சில் உரமுமின்றி
  -ஓடி விளையாடு பாப்பா
  -விடுதலை விடுதலை
  -ஆடுவோமே- பள்ளுப்பாடுவோமே
  - நல்லதோர் வீணை செய்தேம்

-எந்த நேரமும்
- எழுந்தது

- வில்லியனூர் மாதா (1983)- பூட்டைத் திறப்பது கையாலே
- எத்தனை கோணம் எத்தனை பார்வை (1983)- நிமிர்ந்த நன்னடை
- சிந்துபைரவி (1985)-மனதில் வேண்டும்
- கண்ணே கனியமுதே(1986)- நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி
- இனி ஒரு சுதந்திரம் (1987)- என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
  - சொல்ல வல்லாயோ கிளியே
  -மோகத்தை கொன்று விடு
- நீதிக்கு தண்டனை (1987) - சின்னஞ்சிறு கிளியே
- வேதம் புதிது(1989)-சாதிகள் இல்லையடி பாப்பா
- புதிய தென்றல்(1993)- ஆசைமுகம் மறந்து போச்சே
- மஹேஸ்வரி(1955)-உலகத்து நாயகியே எங்கள் முத்து
- துள்ளாத மனமும் துள்ளும் (1999)-காக்கைச் சிறகினிலே
- பாரதி(2000)-நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
  -நின்னை சணடைந்தேன் கண்ணம்மா
  -அக்னி குஞ்சொன்று கண்டேன்
  -வந்தே மாதரம் ஜெய
  -நல்லதோர் வீணைச் செய்தேன்

இவ்வாறு திரையிசையை ஆராய்ந்த வகையில் 65 படங்களில் 113 பாடல்கள் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும், பாரதியாரின் பாடல்கள் இடம்பெற்ற படங்களும் பாடல்களும் இன்னும் என் கவனத்திற்கு வராமல் விடுப்பட்டு இருக்ககூடும்.

முடிவுரை

மனிதன் எளிதில் இன்புறுவது இரண்டு ஒன்று விழிவழி காணும் காட்சியில் தனக்கு பிடித்தமானவற்றில் மனதையும் எண்ணத்தையும் செயல்பட விடுகிறான். மற்றொன்று செவிக்கு இனிமையான வார்த்தைகளைக் கேட்டு இன்புறுகிறான். அந்த வகையில் மனிதன் இசையில் மயங்கிக் கிடக்கிறான். மனிதனைப் பெரிய அளவில் மயக்கும் சாதனமாகத் திரைப்பட பாடல்கள் அமைகின்றன. அந்தவகையில் மனிதனின் எண்ணங்களையும் வாழ்வியலையும் படியெடுத்துக்கொடுக்கும் சாதனமாகத் திரைப்படங்கள் வெளிப்படுகின்றன. அப்படங்களில் அமையும் பாடல்கள் மனிதனின் வாழ்வியலோடு ஒன்றிவிடுகின்றன. இவ்வடிப்படையில் மகாகவி பாரதியாரின் பாடல்கள் தமிழ்த் திரைப்படங்களில் காட்சிகளுக்கு ஏற்பவும், கதை போக்குகளுக்கு ஏற்பவும் இடம்பெற்றன. திரைப்படங்களில் ஆளுமை செலுத்திய பாரதியார் பாடல்கள் படங்களுக்கு பெருமை சேர்த்தது மட்டுமின்றித் தமிழ் உணர்வினையும் மக்களிடையே வளர்த்தன. இவ்வகையில் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் மகாகவி பாரதியாரின் பாடல்கள் ஒரு மகத்தான இடத்தைப் பிடித்திருப்பதை அறிய முடிகிறது.

துணைநின்ற நூல்கள்


- இராமநாதன், விகரு. (தயாரிப்பு), பாரதியார் கவிதைகள், ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதினெட்டாம் பதிப்பு - 2011.
- செல்லமுத்து, பொன். (தொகுப்பாசிரியர்), திரை இசையில் பாரதியார் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2014.


********* ********* ********** ********* ********* ********** ********** **********